# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA-1298/A/2024**

| | | |
|---|---|---|
| திருமதி. அன்புச்செல்வி | .. | மனுதாரர் |

/எதிர்/

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(ஊராட்சிகள்),<br>ஊராட்சி ஒன்றியம்,<br>வேப்பூர்,<br>பெரம்பலூர் மாவட்டம் – 621 717. | .. | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திருமதி. அன்புச்செல்வி அவர்கள் QR Code Meeting Link மூலம் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வை.சங்கரன் பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ((ஊராட்சிகள்), பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 13.10.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சரின் சூரிய சக்தியால் இயங்கும் பசுமை இல்லம் திட்டத்தில் (2019–2020 நிதியாண்டு) கீழ்கண்ட பயனாளிகளுடன் தொடர்புடைய பயனாளிகள் கொடுத்த விண்ணப்பத்தின் நகல், இத்ததிட்டத்திற்கான அரசு ஆணை மற்றும்

பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான தகுதி போன்ற விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரி 7 இனங்களில் விண்ணப்பித்துள்ளார். பயனாளிகளின் விவரம் 1. மதியழகன் த/பெ அன்பழகன் 2.மாரியாயி க/பெ ஆறுமுகம் 3.மலர் க/பெ. அய்யாசாமி 4.இன்பலெட்சுமி த/பெ. கோவிந்தராசு 5.செல்வராசு த/பெ.வெங்கடாசலம்

3. பொது தகவல் அலுவலர் பதில் அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 24.11.2023 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 01.02.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 02.02.2024 மற்றும் 10.11.2025 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் QR Code Meeting Link மூலம் ஆஜரான மனுதாரரின் இணைப்பு சரியாக இல்லாத காரணத்தால், மனுதாரரின் மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் தகவல்களையும் பரிசீலனை செய்த ஆணையம், பொதுத் தகவல் அலுவலர் 10.11.2025 நாளிட்டு வழங்கிய தகவல்களில் இனம்1இல் திருமதி மலர் பயனாளியின் விண்ணப்பம் கிடைக்கப் பெறவில்லை எனப் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், இனம் 3, 4 மற்றும் 5க்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பு வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது.

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரிய* இனம் 1, 3, 4 மற்றும் 5 ஆகிய இனங்களுக்கான *முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது”</u> என்ற <u>முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் விசாரணை அறிக்கை நகலுடன் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்** SA-1298-A-2024

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),
ஊராட்சி ஒன்றியம்,
வேப்பூர்,
பெரம்பலூர் மாவட்டம் – 621 717

**மனுதாரர்:**
திருமதி. அன்புச்செல்வி
அற்புதா மருத்துவமனை எதிரில்,
வெங்கடேசபுரம்,
பெரம்பலூர் – 621212

Copy to File
Je/PA 06.10.2026